பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 12 2025 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கான கால அவகாசம் இம்மாதம் 14-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

2. மகளிரின் கண்ணியம் மற்றும் அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்வதில் மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உள்ளதாக மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

4. சீமை கருவேல மரங்கள், ஆகாய தாமரை ஆகியவற்றை அகற்றுவதற்கு திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

5. உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியில், இந்தியா - பிரேசிலை வென்றது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கான கால அவகாசத்தை வரும் 14-ஆம் தேதிவரை நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் கணக்கீட்டுப் படிவங்களை வரும் 14-ஆம் தேதிவரை வழங்கலாம் என்றும், வரைவு வாக்காளர் பட்டியல் 19-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, திருநெல்வேலியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாவட்ட ஆட்சியர் திரு சுகுமார் தெரிவித்தார்.

***(Sound Byte — ஆட்சியர் திரு சுகுமார் — 40 Sec.)***

<<<<<<>>>>>

மகளிரின் கண்ணியம் மற்றும் அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்வதில் மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதில் அரசின் நிலைப்பாடு குறித்து புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம்

பேசிய அவர், மகளிர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார்.

***(Sound Byte — எல். முருகன் - 43 Sec.)***

<<<<<<>>>>>

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், 30 ஆண்டுகளுக்கு முன்னர் கட்ப்பட்ட கட்டிடங்களை புதிதாக கட்டித்தரும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டை வெங்கடாபுரம் திட்டப்பகுதியில் இரண்டு கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பிலான குடியிருப்பு புனரமைப்புப் பணிகளை இன்று தொடங்கிவைத்து அவர் பேசினார்.

***(Voice Byte — மா. சு. - 40 Sec. )***

<<<<<<>>>>>

பள்ளி செல்லும் வயதில் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உள்ளதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டம் செருதூர் வெள்ளையாற்றிலும், வேளாங்கண்ணியிலும் கடற்கரை பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், மாநிலத்தில் நிதிநெருக்கடி உள்ள போதிலும், வளர்ச்சித் திட்டங்கள் தொய்வின்றி செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்ததார்

மாநிலத்தில் பள்ளிக்கல்வித்துறை மூலம் அனைத்துத் திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழக கடலோரப்பகுதிகளில் மீனவர்களுக்கு தேவையான கடற்கரை தடுப்புச்சுவர், படகு கட்டும் தளம் போன்ற பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடற்கரையோர கிராமங்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவதற்கான திட்டங்களையும் மாநில அரசு செயல்படுத்தி வருவதாகவும் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சீமை கருவேல மரங்கள், ஆகாய தாமரை செடிகள் ஆகியவற்றை அகற்றுவதற்கு திமுக அரசு எந்த நடவடிக்கையும்

எடுக்கவில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மழை நீரை சேமித்து வைக்கும் நீர்நிலைகளை முறையாக தூர்வாரவில்லை என்றும், கரைகளை பலப்படுத்தி, சுத்தப்படுத்தி பராமரிக்கும் பணியையும் மேற்கொள்ளவலிலை என்று கூறியுள்ளார்.

நீர்நிலைகளை பராமரிப்பதாக தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளித்துவிட்டு, ஆட்சிக்கு வந்த பின்னர் அப்பணிகளை அரசு கண்டுகொள்ளவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, உச்சநீதிமன்றம் பல முறை கெடு விதித்தும் அதனை கண்டுகொள்ளாமல் திமுக அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியை, பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் இன்று சந்தித்துப் பேசினார்.

சென்னை கிரின்வேஸ் சாலையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகம், புதுச்சேரி, கேரள சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக வேட்பாளராக போட்டியிட விரும்புவோர் வரும் 15ஆம் தேதி முதல் 23ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காலை 10 மணி முதல், மாலை ஐந்து மணிவரை விண்ணப்பப் படிவங்களை கட்சியின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னையில் சுமார் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தினை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு இன்று ஆய்வு செய்தார்.

---------------

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் உள்ள சிற்ப கலைக்கல்லூரி வளாகத்தில் சுமார் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களுக்கு மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் இன்று அடிக்கல் நாட்டினார்.

-----------------

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 144-ஆவது பிறந்த தினத்தையொட்டி, தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் உள்ள நினைவு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைக்கு மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

--------------

தேனி மாவட்டத்தில் வரும் 21-ஆம் தேதிமுதல், 28-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள புத்தக திருவிழாவிற்கான இலட்சினையை ஆட்சியர் திரு ரஞ்ஜீத் சிங் வெளியிட்டார்.

----------------

மயிலாடுதுறை மாவட்டம் மன்னம்பந்தலில் இந்தியன் வங்கியின் 50-ஆவது கிளையை சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு வெங்கட்ராமன் இன்று திறந்துவைத்தார்.

----------

மதுரையில், கோட்ட அளவிலான தபால்துறை குறைதீர்ப்புக்கூட்டம் வரும் 22 ஆம் தேதி முதுநிலை அஞ்சலக கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

----------

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்புக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதற்கட்ட சரிபார்ப்புப்பணி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு குமரகுருபரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை ஆட்சியர் திரு. மோகன சந்திரன் இன்று ஆய்வு செய்தார்.

---------------

நீலகிரி மாவட்டம், உதகை அருகேயுள்ள மாவநல்லா பகுதியில் பொதுமக்களை அச்சுறுத்தி வந்த புலி, வனத்துறையினர் வைத்த கூண்டில் சிக்கியது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**சென்னையில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியில், இந்தியா 3-0 என்ற ஆட்டக்கணக்கில் பிரேசிலை வென்றது.**

**இந்தியாவின் வேலவன் செந்தில்குமார், அனாகத் சிங், அபய் சிங் ஆகியோர் இப்போட்டியில் வெற்றிபெற்றனர்.**

**பி பிரிவில் எட்டு புள்ளிகளுடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது.**

**-------------**

இந்தியா — தென்னாப்பிரிக்கா இடையேயான இரண்டாவது டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

சண்டிகரில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

**-------------------**

ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tarun Mannapalli, Tanya Hemanth, Tanvi Sharma, Anmol Kharb** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**